Reg. No. 1-M.

# போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜெட்

## I-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

## SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

DECEMBER 23, 1930.

நெ. 51.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1930-௵ டிசம்பர்௴ 23௳. [PRICE, 6 *pies*.

## கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

## Tamil Translation of Notifications by Government.

### லா டிபார்ட்மெண்ட்

(ஜெனரல்).

### விளம்பரம்.

போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ், 1930-௵
டிஸெம்பர்௴ 8௳.

நெ. 1001.—1923-௵ மார்ச்௴ 20௳ யுள்ள **போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 327**-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லா (ஜெனரல்) டிபார்ட்மெண்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக் குறித்த விதிகளில், (1914-௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் செய்ய உத்தேசிக்கும் திருத்தத்தின் அடியிற்கண்ட மசோதாவானது - அதனால் வெகுசாய் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்குத் தெரியும் பொருட்டு இதனால் பிரசித்தம் செய்யப்படுகிறது. மேலும், ஷை மசோதா 1931-௵ ஜனவரி௴ 15௳ யன்றைக்காவது அதற்குப் பிறகாவது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், அந்த மசோதா விஷயமாய் மேலே கண்ட தேதிக்குமுன் எந்த நபரிடமிருந்தாகிலும் வந்துசேரக்கூடிய எவையேனும் அபிப்பிராயக்குறிப்புகள் அல்லது ஆட்சேபனைகளைப் பற்றி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் யோசிப்பார்களென்றும் இதனால் அறிக்கையிடப்படுகிறது :—

மசோதா திருத்தம்.

'G' அனுமதிச்சீட்டைச் சேர்ந்த (13) குறிப்பிட்ட திட்டத்துக்குப் **பர்த்தியாக** அடியிற்கண்டதை **அமைத்துக்கொள்ளவேண்டும்** ; அதாவது :—

"(13) யாதொரு நபர் தகுதியானவரும் சரியானவருமென்றும், மோடார் வண்டிகளைச் சேர்த்துவைப்பதற்கோ அவைகளுக்கு மராமத்து செய்வதற்கோ தகுதியான ஒரு இடத்தை ஏற்படுத்திப் பராமரித்துவருகிறாரென்றும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி பொலீஸ் கம்மிஷனராவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது அபிப்பிராயப்பட்டாலன்றி மற்றப்படி, அந்த நபரை வாடகைக்கு விடப்படும் அல்லது வாடகைக்கு ஓடும் மோடார் வண்டியின் சொந்தக்காரராகவோ அதைத் தம் சுவாதீனத்தில் வைத்திருப்பவராகவோ ரெஜிஸ்டர் செய்யக்கூடாது."

ஏ. எப். டபில்யு. டிக்ஸன்,
கவர்ன்மெண்ட் டெப்யுடி ஸெக்ரெடரி.

## டெவெலப்மென்ட் டிபார்ட்மென்ட்.

---

### விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் ௵
டிஸெம்பர் ௴ 1௳.

நெ. 373.—டெவெலப்மென்ட் டிபார்ட்மென்டில் பிறந்து, 1929-ம் ௵ ஜனவரி ௴ 22௳யுள்ள போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 155-வது பக்கத்தில் (இங்கிலிஷில்) பிரசித்தம் செய்யப்பட்டுள்ள V-ம் நெ. விளம்பரத்தில், காபிகொட்டையை உலர்த்திப் பக்குவப்படுத்தும் வளவுகள் விஷயமாய் இந்து தேசத்துத் தொழிற்சாலைகளைக் குறித்த ஆக்ட் 22-வது பிரிவினின்றும் கொடுக்கப்பட்டிருக்கும் நிவாரணையை, ௸ விளம்பரத்தில் சொல்லியிருக்கும் காரணங்களை முன்னிட்டு, காபி கொட்டையை உலர்த்திப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கும் பிரயோகப்படுத்தவேண்டுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்குத் திருப்திகரமாய் ருஜு செய்யப்பட்டிருக்கிறபடியால், அவர்கள் - பிற்பட்டுத் திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம் ௵த்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்துத் தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம் ௵த்திய ஆக்ட் 30-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில்கண்ட (e) அடையாளமிட்ட பகுதியின் (1) குறிப்பிட்ட உட்பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, ௸ விளம்பரத்தில் அடியிற்கண்ட திருத்தத்தை இதனால் களிகூர்ந்து செய்கிறார்கள் :—

### திருத்தம்.

௸ விளம்பரத்துடன் சேர்த்திருக்கும் ஷெட்யூலைச் சேர்ந்த 6-வது பாபத்திலே, "வளவுகள்" என்னும் வார்த்தைக்குப் பர்த்தியாக "தொழிற்சாலைகள்" என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

எஸ். வி. ராமமூர்த்தி,
கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

---

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.